என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதன்பிறகு 60,000 ரூபாய் கட்டவேண்டும் என்று கூறியவுடன் 25,000, 10,000, 12,000, 13,000 என்று அந்த கிராம மக்களிடையே நன்கொடை வசூல் செய்து 60,000 ரூபாயையும் கட்டி இருக்கிறோம். அதேபோல இடத்தைப் பொறுத்தவரையில் 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். அரசுக்குப் பரிந்துரை செய்யும் வகையில் அதனுடைய உண்மை நகலை நம்முடைய இதயத்தாய் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறேன். தயவுகூர்ந்து இந்த நிதியாண்டிலேயே அதைச் சேர்த்து அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக வழங்குவார்களா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய முதல் கேள்விக்கு அளித்த பதிலையே உறுதி செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 239, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

239--

திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்டுதல்.

*23103–திரு. **ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மத்திய மற்றும் மாநில ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில்தான் பீடித் தொழிலாளர் நலன் குறித்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியில் அதிகமான பீடித் தொழிலாளர்கள்

உள்ளார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் குடிசைத் தொழில் போன்று வீடுகளிலே பெண்களும், ஆண்களும் பீடிசுற்றும் தொழிலிலே ஈடுபடும்போது கேடு விளைவிக்கும் நோய்கள் பல ஏற்பட வாய்ப்புள்ளது. பீடித்தொழிலாளர்களுக்காகத் தனி மருத்துவமனை குடியாத்தத்தில் உள்ளது. திருப்பத்தூரிலே இருந்து குடியாத்தம் செல்வது என்றால் 90 கிலோ மீட்டர் செல்லவேண்டும். இதனால் ஏழை பீடித் தொழிலாளர்கள் செல்ல முடியவில்லை. தவிரவும் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் பீடி ஃபேக்டரி அதிகமாக உள்ள தொகுதி என்னுடைய திருப்பத்தூர் தொகுதியாகும். வெளி மாநிலங்களுக்கு ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான பீடி மூட்டைகளை ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகவே திருப்பத்தூர் தொகுதியிலுள்ள பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் பீடித் தொழிலாளர்களுக்காக பல நலத்திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பீடித் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் அனைத்தும் மாநில ஆலோசனைக் குழுவால் முடிவு செய்யப்படுகின்றன. திருப்பத்தூரில் மருத்துவமனை ஏற்படுத்துவது குறித்த விஷயத்தை விவாதிக்கவேண்டியது அவசியம் எனக் கருதினால் மாநில ஆலோசனைக் குழுவின் அடுத்த கூட்டத்தில் விவாதித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது குறித்து பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்காக மருத்துவமனை மற்ற பிற நலத் திட்டங்கள் எல்லாம் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநில ஆலோசனைக் குழுவில் வைத்து பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துவிட்டார் அல்லவா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் நல நிதிச்சட்டம் மற்றும் விதிகளின்படி நியமிக்கப்பட்டுள்ள மத்திய மற்றும் மாநில ஆலோசனைக் குழுக்கள் தருகின்ற பரிந்துரைகளின் அடிப்படையில் பீடித் தொழிலாளர் நலன் குறித்த திட்டங்கள் நிறைவேற்ற முடிவு செய்யப்படுகின்றன. மேற்படி ஆலோசனைக் குழுக்களில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்

தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் ஹைதராபாத் நல ஆணையாளர் செயலாளராகவும், மாநில தொழிலாளர் நலத்துறையினுடைய ஆணையாளர் அவர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாகவும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

முற்பகல் 11.05

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் மிகமிக அதிகமாக வாழ்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லாத் தொகுதிகளிலும் பீடித் தொழிலாளர்கள் அதிகம் இருக்கின்றார்கள். மாவட்டத்தில் இரண்டே இரண்டு பீடித் தொழிலாளர்கள் மருத்துவ மனைகள்தான் இருக்கின்றன. எனவே திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கூறியது போல, திருப்பத்தூரிலோ அல்லது திருப்பத்தூருக்குப் பக்கத்திலே இருக்கிற வாணியம்பாடியிலோ மருத்துவமனை துவக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது மாநில அரசே இதைப்போன்ற ஒரு முயற்சியை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கூட்டத்தில் விவாதித்து அதற்குண்டான முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 240, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

240--

கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆதிதிராவிடர் நலவிடுதி அமைத்தல்.

***22665–திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கண்டமங்கலம் ஒன்றியம், மிட்டா மண்டகப்பட்டு, சித்தலம்பட்டு ஆகிய கிராமங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆதிதிராவிடர் நல விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?